



ஈரோடு மாவட்டம் சென்னிமலை காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்றுமதி விற்பனை நிலையத்தினை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் திறந்து வைத்து தொடக்க மற்றும் தொழிலில் சங்க ஏற்றுமதி விற்பனை நிலையத்தில் ஏற்றுமதியாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. நிகழ்வில் கைத்தறி துறை இயக்குனர் மகேஸ்வரி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஸ்ரீதேவி, கணேசன், மாதேஸ்வரன், கைத்தறி துறை கூடுதல் இயக்குனர் மகாலிங்கம், திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர் இல.பத்மநாபன், கைத்தறி துறை உதவி இயக்குனர் சரவணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை விழாவினை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டம், அரகண்டநல்லூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி உட்பட்ட 125 வாலிபால் அணிகள் மற்றும் 100 கபடி அணிகளைச் சேர்ந்த 3000 விளையாட்டு வீரர்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள் வழங்கும் விழா விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ்நாடு மாநில கைப்பந்து கழகத் தலைவர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடைகளை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அமைச்சர் துரைமுருகன் – முன்னணியினர் பங்கேற்பு!

# வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் வேண்டுகோள்!

வேலூர், நவ. 10-

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேலூர் வடக்கு மாவட்ட கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று(10.11.2025 திங்கள்) மாலை 4.00 மணியளவில் A.S.குருசாமி மஹால், சேவூர், காட்பாடி. மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடைபெறவுள்ளது.



இந்நிகழ்ச்சியில் கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர், துரைமுருகன் அவர்களும், இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக கொள்கை பரப்புச் செயலாளர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், வேலூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே, மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பிரதிநிதிகள், பாக முகவர்கள் (BLA2),பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA) அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### SIR–ரைக் கண்டித்து

# நவ.11 தூத்துக்குடி மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கீதா ஜீவன் – அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, நவ.10-

ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சாதிகாரப் போக்கில் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து திமுக தலைமை அறிவிப்பின் படி தூத்துக்குடியில் ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டண ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட திமுக செயலாளர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.





அவர்களது அறிக்கை வருமாறு :-

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் SIRக்கு தொடக்கம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், திமுக உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளது. சிறுபான்மையினர் வாக்குகள், பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறி வைத்து நீக்கும் நோக்கத்துடன் தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித்திட்டத்தோடு ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி, முறையான திட்டம் இன்றி அவசர கதியில் SIRஐ கொண்டு வந்து தேர்தல் ஆணையம் இதைச் செய்திட முயல்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடி கள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIR திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் கனமழை மற்றும் மோசமான வானிலை எதிர்பார்க்கப்படும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலானோர் கிராமப்புற மக்களாகவும் விவசாயிகளாகவும் இருக்கும் நிலையில் தேர்தல் ஆணையம் வழங்கும் Enumeration Form எனும் கணக்கீட்டுப் படிவங்களை பெற்று, திருப்பி அளிக்க போதிய கால அவகாசம் கிடைக்காது. மேலும் அந்தப் கணக்கீட்டுப் படிவங்களில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை எப்படி நிரப்புவது என்பது குறித்து மக்களிடையே பெரும் குழ ப்பங்கள் நிலவுகிறது. இந்த செயல்முறையில் பெரும் எண்ணிக்கையில் தகுதியுள்ள வாக்காளர்கள். நீக்கப்படும் அபாயம் உள்ளது. மேலும் இந்தக்காலம் Enumerationக்கு உகந்த காலம் இல்லை என்று திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் தனித்தனியே அறிக்கை விடுத்திருந்தன.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்தவாறே 04.11.2025ஆம் தேதியில் இருந்து இன்று வரை SIR பெரும்பாலான தகுதியுள்ள வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது. பொரும்பாலான இடங்களில் BLOக்கள் கணக்கீட்டுப் படிவங்களை (Enumeration Form) வழங்குவதில் தாமதம் நிலவுகிறது. BLOக்களும், BLAக்களும் பல இடங்களில் இன்னும் சரியான தகவல் தொடர்புகளால் ஒருங்கிணைக்கப்படவில்லை. மேலும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமையற்றதாகவும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே SIR சீராய்வைக் கைவிடும்படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும், கண்டுகொள்ளாமல் ஒன்றிய பாஜக அரசின் கைப்பா வையாக மாறி அவசரகதியில் எதேச்சாதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து தூத்துக்குடியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் வருகின்ற நவம்பர் 11 ஆம் தேதி தூத்துக்குடி மாநகரில் சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் (விவிடி சிக்னல்) அருகே மாபெரும் கண்டண ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அந்த கண்டண ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்ட திமுக, திராவிடர் கழகம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, மதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம், ஆதித்தமிழர் பேரவை, ஆதித்தமிழர் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், தமிழ்புலிகள் கட்சி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னோடிகள் என அனைவரும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருநெல்வேலி மாவட்டத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்!

## மு.அப்துல் வகாப் – மேயர் கோ.ராமகிருஷ்ணன் முன்னிலை! மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தொடங்கி வைத்தார்!

நெல்லை.நவ.10.

திருநெல்வேலி மாவட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் இரண்டாம் கட்டமாக 4ம் முகாம் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மேலப்பாளையம் முஸ்லீம் மேல்நிலைப் ப்பள்ளியில் (08.11.2025) நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தினை கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதன் ஒரு பகுதியாக, திருநெல்வேலி மாவட்டத்தில்,முதல் கட்டமாக 10 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களில் 24,346 நபர்கள் கலந்து கொண்டு உடல் பரிசோதனை செய்து கொண்டனர். இப்பரிசோதனைகளில் நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, உயர்சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டமாக ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் சேரன்மகாதேவி வட்டாரம், வீரவநல்லூர் புனித ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும்,களக்காடு வட்டாரம் டோனாவூர் வாக்கர் மேல்நிலைப் பள்ளியிலும், இராதாபுரம் வட்டாரம் கூடன்குளம் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றது.இம்முகாமில் 5498 நபர்கள் கலந்து கொண்டு உடல்பரிசோதனை செய்து கொண்டனர்.

இப்பரிசோதனைகளில் 23 நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, உயர்சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 169 கர்ப்பிணி தாய்மார் களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றையதினம் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் மூன்றாவது முகாமாக இராதாபுரம் வட்டாரம் கூடன்குளம் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.இம்முகாமில் அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன்,எக்ஸ்ரே மற்றும் முழுமையான இரத்தப் பரிசோதனை,காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் பரிசோதனைகளும், ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற அனைத்து பரிசோதனைகளும் கண்டறியப்படும்) மேலும் பொது மருத்துவம்,அறுவை சிகிச்சை, இதயவியல்,மகப்பேறு மருத்துவம் எலும்பு மற்றும் நரம்பியல்,மனநலம், நுரையீரல், தோல் நோய், காது, மூக்கு தொண்டை மருத்துவம்,கண் மருத்துவம்,பல் மருத்துவம்,ஆயுஷ் மற்றும் இயன்முறை சிகிச்சை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவம் வழங்கப்படுகிறது.

”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சிறப்பபான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.அனைத்து மக்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேலும் 15.11.2025 அன்று வள்ளியூர் வட்டாரம் பணகுடி திரு இருதய மேல்நிலைப்பள்ளியிலும்,22.11.2025 அன்று அம்பாசமுத்திரம் வட்டாரம் அகஸ்தியர்பட்டி கேம்ப்ரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 29.11.2025 அன்று மானூர் வட்டாரம் கங்கைகொண்டான் நம்ம ஊரு குளோபல் பள்ளியிலும், 06.12.2025 அன்று பாப்பாக்குடி வட்டாரம் நடுக்கல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும்,13.12.2025 அன்று பாளையங்கோட்டை வட்டாரம் சங்கர்நகர் ஜெயந்திரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி யிலும், 20.12.2025 அன்று நாங்குநேரி வட்டாரம் தளபதிசமுத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

‘எல்லார்க்கும் எல்லாம் ‘ இது தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்
### நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.


ஸ்டேன்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பிரானவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்
### நவம்பர் 10 (2014)



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**